மாண்புமிகு திரு. செ. மாதவன் : பம்பாயிலிருந்து இது போன்று விசைத்தறிகளை வாங்குகின்ற முயற்சி இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள சிறு தொழில் வாரியமே இதைச் செய்து கொடுக்கலாம் என்று ஒரு முயற்சியை இப்பொழுது பரிசீலித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள். இந்தக் கஷ்டம் இல்லாமல் போய்விடும்.

கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலை.

*12 வினா—**திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகரில், மாப்படுகை பகுதியிலுள்ள கல்லணை-காவிரிப்பூம்பட்டினம் சாலையை அரசின் நெடுஞ்சாலைப் பிரிவு எப்போது மேற்கொண்டது ?

(இ) மேற்கண்ட சாலை வேலை எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மாயூரம் நகராட்சிப் பகுதிக்குள் அமைந்துள்ள கல்லணை-காவிரிப்பூம் பட்டினச் சாலையில் 61/2 மைல் முதல் 62/5 மைல் வரையுள்ள சாலையையும் அத்துடன் 590 அடி நீளமுள்ள சாலையையும் அரசு 1968–69-ல் மேற்கொண்டது.

(இ) மேற்குறிப்பிட்ட சாலைக்குச் சிவப்புச் சரளைக்கல் பரப்பித் தனிப்பட்ட முறையில் செப்பனிடும் பணி ஏற்கெனவே முடிவடைந்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேற்கண்ட சாலைக்கு அரசு ஒதுக்கியுள்ள தொகையை அறிவிக்க இயலுமா? அது போலவே, கல்லணை—காவிரிப்பூம்பட்டினம் சாலையில் இன்னும் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்படாத பகுதிகள் விரைவில் நெடுஞ்சாலைப் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட ஆவன செய்ய அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது மேற்படி சாலைக்கு ரூ. 24,500 செலவிடப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள சாலைகள் கொள்கை அடிப்படையில் ஆண்டுதோறும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்பாரை கிராமத்துக்கு வடிகால் திட்டம்.

*13 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா தென்பரை கிராமத்திற்கு வடிகால் திட்டம் தயாரிக்கப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டதா ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?